Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (18-11-65) இதழ் 279

விசுவாவசு கார்த்திகை 3 றஜபு பிறை 23 வியாழக்கிழமை

## குளிக்க தண்ணீரின்றி தேங்காய்ப்பூதேய்க்கும்பரிதாபம்

### எம். பி. வீட்டை முற்றுகையிட்ட குடியேற்றவாசிகள்

வல்வெட்டி, செவ். அவசர வேலை காரணமாக தற்செயலாக ஒரு நாளைக்குக்குளிக்க முடியாவிட்டால் அன்று முழுவதும் சோம்பலின் ஆட்சிக்கு நாங்கள் அடிைமப்பட்டுவிடுகிறோம். அது தேக நலனுக்கும் கெடுதல் விளைவிக்கிறது. ஆனால் வவனியாவில் உள்ள குடியேற்றத்திட்டமொன்றில் வாழும் மக்கள் ஒரு வாரத்துக்கு ஒரு முறைதான் தங்கள்மேனியைச்சுத்தம் செய்ய முடிகிறது! - அதுவும் தண்ணீரிலல்ல, கறி சமைக்க உபயோகிக்கப்பட்ட தேங்காய்ப்பூவால்தான்.

உணவு சமைக்க உதவும் பாத்திரங்களையும் பிழிந்த தேங்காய்ப்பூவாலேயே சுத்தம் செய்யும் கதையையும் தங்களுக்குள்ள குடிநீர் பிரச்னையையும் எடுத்துக்கூற வவனியா மாவட்டத்தில் உள்ள சுதந்திரபுரத்து குடியேற்றவாசிகள் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் பருத்

(6-ம் பக்கம் பார்க்க)

# பெட்ரோல், துறைமுக ஊழியர் வேலை நிறுத்தம்

## கடற்படையினரும் சேவைக்கு அழைப்பு

### மறியல்செய்த துறைமுக ஊழியர் பலர் கைது

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்திலும் கொலனாவை எண்ணெய்க் குதப்பகுதியிலும் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் ஒழுங்கை நிலைநாட்டவும் ஆயுதந்தாங்கிய பொலிசாரும், கடற்படையினரும் இன்று காலை சேவைக்கு அழைக்கப்பட்டனர். கொழும்புத்துறைமுகத்தில் கோட்டை, கொச்சிக்கடை வாசல்களில் சுலோக அட்டைகளைத் தாங்கிக்கொண்டு 'மறியல்' செய்த துறைமுகத் தொழிலாளர் பலரை பொலிசார் கைதுசெய்தனர்.

### அடையாள வேலை நிறுத்தமும் திடீர் வேலை நிறுத்தமும்

லங்க சமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் யூனியன் காரியதரிசி எல். வை. பன்றிஸ் வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளின் கட்டுப் பாட்டிலுள்ள யூனியன்கள் துறைமுகத்தொழிலாளரை இன்று ஒரு நாள் அடையாளவேலை நிறுத்தம் செய்யுமாறு கேட்டிருந்தது.

### பெட்ரோலிய தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடிப்பு

இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன சபை அங்கத்தவர் ஒருவருக்கும் கூட்டுஸ்தாபன தொழிலாளர் இருவருக்குமிடையில் ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த சிலபிரிவு தொழிலாளர்கள் நேற்று திடீர் வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தம் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

### ஆயுதந்தாங்கிய பொலிசாருடன் கடற் படையினரும் சேவை

கொழும்புத்துறைமுகத்திலும் கொலன்னைவை எண்ணெய்க்குதப் பகுதியிலும் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தினால் அமைதிக்குப் பங்கம் ஏற்படாமல் தடுக்கவும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாது வேலைக்குத்திரும்பியவர்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் துறைமுக, கொலனாவை எண்ணெய்க் குதப்பகுதி உடைமைகளுக்குச் சேதமேற்படாமல் பாதுகாக்கவும் ஆயுதம்தாங்கிய பொலிசாரும் கடற்படையினரும் இன்று காலை சேவைக்கு அழைக்கப்பட்டனர்.

### கலகத்தை அடக்கும் பொலிஸ படையினர் உஷார் நிலையில்

கலகத்தை அடக்கும் பொலிஸ் படைப்பிரிவுகள் கொழும்பிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் உஷார் நிலையிலுள்ளன. ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ள பொலிசாருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன கொழும்புத் துறைமுகத்தின் மூன்று பிரதான வாசல்களிலும் ஆயுதந்தாங்கிய கடற்படையினர் காவல்புரிகின்றனர். பொலிசாருக்கு விடுக்கப்பட்ட உத்தரவுகளைத் தொடர்ந்து துறைமுக வாசல்களில் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி வேலைக்குச்சென்ற தொழிலாளர்களைத் தடுத்து 'மறியல்' செய்ய முயற்சித்த வேலை நிறுத்தக்காரர்களைப் பொலிசார் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

### உரியவர் யார்?

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் பெரியகடையில் திரு. மணியம் என்பவரால் ஒரு பங்கீட்டரிசிப்புத்தகம் கண்டெடுக்கப்பட்டு ஈழநாட்டுக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் ஈழநாடு காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### காலனை வென்றன்!

யாழ்ப்பாணம், வியாழன்

பதினேழு தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் இருதய சத்திர சிகிச்சை செய்யப்பட்ட பண்டைத்தரிப்பைச் சேர்ந்த 12 வயதான சிறுமி பரமேஸ்வரி நேற்றுக் காலை மரணமானார்.

அச்சிறுமியின் இருதயத்தில் இருந்த ஒரு சிறு துவாரத்தை அடைப்பதற்கு ஒன்பது மணிநேரமாக நடைபெற்ற போராட்டத்தின் பின், சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது. சத்திர சிகிச்சையின் போது சிறுமியின் உடலிலிருந்து வெளியில் எடுக்கப்பட்ட இருதயம், ஐஸ்பெட்டிக்குள் இரண்டு மணிநேரம் வைக்கப்பட்டு, துவாரம் அடைக்கப்பட்டபின் மீண்டும் பொருத்தப்பட்டது.

சத்திர சிகிச்சைக்குப் பின் ஆஸ்பத்திரியிலேயே இருந்த சிறுமி, நீராகாரம் மட்டுமே அருந்திவந்தார் என்று அறியப்படுகிறது. சிறுமியின் உயிரைக் காப்பாற்ற டாக்டர்கள் எடுத்த பெரு முயற்சி வீணாகிவிட்டது.

### காஷ்மீர பிரச்னைபற்றி இலங்கை தூதர்

கராச்சி, நவ. 17

ஐ. நா. மூலமே காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என இலங்கை கருதுகிறது என பாகிஸ்தானிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் மேயர் ஜெனரல் எச். டபிள்யூ ஜி. விஜயக்கூன் கூறினார், (பி.டி.ஸி)

### வேலை நிறுத்தத்தினால் வேலைகள் பாதிக்கப்படவில்லை

கொழும்புத் துறைமுகத்தில் அறுபதுசதவீதத்துக்கு அதிகமான தொழிலாளர் வேலைக்குத் திரும்பியதாக துறைமுக கூட்டு ஸ்தாபன பதில் தலைவர் திரு. அபய குணசேகரா தெரிவித்தார். எதிர்பார்த்ததற்கு மதிகமாகவே தொழிலாளர் வேலைக்கு வந்திருப்பதால் துறைமுகவேலைகள் தடையின்றி நடைபெறுமென திரு. அபயகுணசேகரா தெரிவித்தார்.

### இருவேலை நிறுத்தங்களும் சட்ட விரோதமானவை

துறைமுகத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் சட்டவிரோதமானதென்றும் வேலை நிறுத்தம்பற்றி கூட்டு ஸ்தாபனத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லையென்றும் தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா தெரிவித்தார். வேலைக்குத் திரும்பிய சகல தொழிலாளருக்கும் சகலவிதமான பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத் தொழிலாளரின் வேலை நிறுத்தமும் சட்டவிரோதமானதென்று மந்திரி சுகததாசா கூறினார். பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனப் பொருள்களின் விநியோகம் தடைபடாமலிருக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மந்திரி கூறினார்.

எண்ணெய், பெட்ரோல்விநியோகம் அவசிய மேற்பட்டால் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படுமென்றும் உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளருக்கு உத்தரவிடப்படுமென்றும் மந்திரி சுகததாசா கூறினார்.

யாழ்ப்பாணத்தில்

### வேலையில்லாதோர் எண்ணிக்கை: விபாரமன பட்டியல் தயாராகிறது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ளவர்களின் வேலையில்லாதவர் தொகை எவ்வளவு என்பது சரியான முறையில் தயாரிக்கப்படாததால் முழு விபரங்களையும் அறியமுடியாமலிருக்கின்றதெனத் தெரியவருகிறது.

முழுவிபரங்களையும் உள்ளடக்கக்கூடிய ஒரு பட்டியலை தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள குடிசன மதிப்பீட்டுப்பகுதியினர் சேகரித்து வருவதாகத்தெரியவருகிறது. இப்பட்டியல் காரியாதிகாரிகள், கிராம சேவையாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படுவதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண தொழில் காரியாலயத்தினால் சேகரிக்கப்பட்ட விபரங்கள் தெளிவாகவும் விபரமாகவும் பல விஷயங்களைத் தெரிவிக்காததன் காரணமாக யாழ்ப்பாணப்பகுதியில் உண்மையில் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை சரிவரத் தெரியவில்லையெனவும் அறியப்படுகிறது.

### இலங்கையின் திருத்தம் ஏற்கப்படாது

நியுயோர்க், நவ. 17

சீனா ஐ. நா.வில் அனுமதிக்கப்படும்பட்சத்தில் போர்மோஸாவை ஐ நா. விலிருந்து நீக்கவேண்டுமென்ற ஷரத்தை அகற்றவேண்டும் என இலங்கை ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறது. ஆனால் இது ஏற்கப்படுமெனத் தோன்றவில்லை எனக் கூறப்படுகிறது. பொதுச்சபையில் இதுசம்பந்தமாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்படவிருக்கிறது.

### பென்பெல்லா இருக்கிறார்

பாரிஸ், நவ. 17

முன்னாள் அல்ஜீரிய ஜனாதிபதி பென்பெல்லாவின் சொந்தக் கையெழுத்துக் கடிதம்ஒன்று அவரது தாயாருக்குக் கிடைத்திருக்கிறது. திரு. பென்பெல்லா இருக்கிறார் என்பதற்கு இது முதலாவது அத்தாட்சி எனக் கூறப்பட்டது.

## மணிவாக்கு

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆண்டவனிடத்து அன்புடையவரே எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராவர். கடவுள் ஒரே இடத்திலிருக்கிறார் என்னுங் கொள்கையுடையாரும் எல்லா உயிர்க்கும் அன்பு செலுத்தும் உயரிய நிலையை அடையமாட்டார். ஈசனிடத்து அன்புடையார் தமக்கும், தம்மைப் போன்றார்க்கும், மற்ற உயிர்கட்கும் அன்பராவர். — திரு. வி. க.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 3 (18-11-65)


## திடீர் வேலைநிறுத்தம்

இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனசபை அங்கத்தவர் ஒருவருக்கும் இரண்டு தொழிலாளருக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர் பலர் நேற்று முன்தினம் திடீரென வேலைநிறுத்தம் ஆரம்பித்தனர். இது வேதனையளிப்பதாகும்.

தொழிலாளருக்கு குறைகள் பல இருக்கலாம். ஆனால் அக்குறைகளைத் தகுந்த முறையில் தெரிவித்து அவற்றுக்கு நிவாரணம் தேட வேண்டும். தொழிலாளர் தமது குறைகளைத் தெரிவித்து நிவாரணம் தேட அவர்களுக்கென தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. தொழிற்சங்கங்கள் மூலம் இந்நாட்டுத் தொழிலாளர் பெரும் பயனும் பெற்றிருக்கின்றனர். இதர துறைகளிலுள்ள தொழிலாளர்களைவிட அரசாங்க சேவையிலும் அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும் பணியாற்றும் தொழிலாளருக்கு அதிக சலுகையும் வசதியும் உரிமையும் இருக்கின்றனவென்பது உண்மை. என்றாலும் நிர்வாக நடைமுறை அலுவல்களில் சில சமயங்களில் சிறுசிறு பிரச்னைகள் தோன்றக்கூடும். பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர் இருவருக்கும் கூட்டுஸ்தாபனசபை அங்கத்தவர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறினால் தொழிலாளர் பலர் திடீரென வேலைநிறுத்தம் மேற்கொண்டதால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் பொதுமக்கள்தான். வாழ்க்கைச் செலவுப் பளுவைத் தாங்க முடியாது கஷ்டப்படும் மக்களை இவ்வித வேலைநிறுத்தங்கள் இன்னும் அதிகமாக வருத்தும். கொள்ளைலாபமடிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள வர்த்தகர்கள் சிலர் இவ்வித வேலைநிறுத்தங்களைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வர்.

தொழிலாளர் தங்கள் குறைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்துப் பேச்சுவார்த்தை மூலம் சமரஸத் தீர்வு காணமுயற்சி செய்ய வேண்டும். எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னரே சக்திவாய்ந்த ஆயுதமான வேலைநிறுத்தத்தை உபயோகிக்க வேண்டும். இந்த ஆயுதத்தைத் தவறான முறையில் உபயோகித்தால் அதை உபயோகிப்பவர்களே அதனால் பாதிக்கப்படக்கூடும். தொழிலாளர் முதலில் தமது எஜமானர்கள் பொதுமக்கள்தான் என்பதையும் அவர்களுக்கு அநாவசியக் கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடாதென்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும். பொதுமக்களின் ஆதரவும் அனுதாபமும் இல்லாமல், தொழிலாளரின் நடவடிக்கைகள் எவ்வளவுதான் நேர்மையாக இருப்பினும் வெற்றி பெறுவது சுலபமல்ல.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளரும் தமது திடீர் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு தங்கள் குறைகளை சமரச வழிகளில் நீக்கிக்கொள்ள முன்வரவேண்டும். பொதுமக்களின் ஆதரவும் அனுதாபமும் அப்பொழுதுதான் அவர்களுக்குக் கிடைக்கும்.

## வாழைப்பழ ஏற்றுமதி

இலங்கையிலிருந்து வாழைப்பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இத்தாலியிலுள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனம் இலங்கை வாழைப்பழங்களை இறக்குமதி செய்ய முன்வந்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இப்பொழுது இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக ரப்பர், தேயிலை தெங்குப்பொருள்கள் ஆகியனவே விளங்குகின்றன. உலக மார்க்கெட்டில் தேயிலை ரப்பர் ஆகியவைகளுக்குப் பெரும் போட்டியும் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்பொருள்களின் வர்த்தகம் எப்படியிருக்குமெனச் சொல்லமுடியாது. இந்த வகையில் புதிய பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதிசெய்ய முயற்சி செய்வது நல்லதே. வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கலாம்.

ஆனால் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்தபின்னரே எப்பொருளையும் ஏற்றுமதிசெய்வது நல்லது. அதிலும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் விஷயம் நன்கு பரிசிலனை செய்யப்படவேண்டும். நம்நாட்டில் வாழைப்பழங்கள் ஓரளவு உற்பத்திசெய்யப்படுகின்றபோதிலும் உள்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் அது உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரியவில்லை. இங்கு வாழைப்பழங்கள் வருவாய் குறைந்த எளிய மக்கள் வாங்கி உண்ணக்கூடியதாக இல்லை. சாதாரண கதலிப்பழங்கள்கூட ஒன்று ஐந்து சதத்திற்கு மதிகமாகவே விற்கப்படுகின்றன. கப்பல் பழம் ஒன்றின் விலை பதினைந்து அல்லது இருபது சதமாகும். இந்நிலையில் வாழைப்பழங்களை ஏற்றுமதிசெய்வதால் இங்குள்ள மக்களுக்குப்பழங்களே கிடைக்காது போய்விடலாம்.

எளிய மக்களும், குறைந்த விலையில் வாழைப்பழங்களை வாங்கி உண்ணக்கூடியதாக இங்கு வாழைப்பழங்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்ட பின்னரே ஏற்றுமதிக்கு முயற்சிசெய்வது நல்லது.

## 'உலகப் பொது மொழி அவசியம்'

உடுப்பிட்டி, புதன்

"உலக நாடுகளில் இன்று நிலவிவரும் மொழி, மத, இனப்பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமானால் உலகப் பொது மொழியொன்று பஹாய் இயக்கத்தின்கொள்கைப்படி உருவாகவேண்டும். இப்பொது மொழி ஊர்ஜிதப்படுத்தப்பட்டதும் அதனை உலக மக்கள் அனைவரும் தங்கள் தாய்மொழிக்கு அடுத்ததாகப் படிக்க வேண்டும். இதனால் அனைவரும் தம்மவரைத் தாய்மொழியிலும் மற்ற நாட்டவரை உலகப் பொதுமொழியிலும் புரிந்துகொள்ளமுடியும். இலங்கையில்கூட தமிழர்-சிங்களவர் என்ற பாகுபாடு இருக்காது. அனைவரும் உலகப் பொதுமொழி பேசும் சகோதரர்களாகவே இருப்பார்கள். சகல நாடுகளுக்கும் பொதுவான சர்வதேச நீதிமன்றம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படுவதுடன் நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வசதிகள் கிடைக்க வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இக்கொள்கைகளை இற்றைக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே பாரசீகத்தில் தோன்றிய பஹாயுல்லா கூறியுள்ளார். இன்று பஹாய் இயக்கம் இலங்கையில் மாத்திரமன்றி இஸ்ரேல், இந்தியா, பாரசீகம், இத்தாலி, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் பெருமளவில் பரவியுள்ளது. அந்நாடுகளில் அரசாங்கங்களும் இதற்கு ஆதரவளிக்கின்றன, இவ்வியக்கத்தின் உண்மையும் தூய்மையுமே இதற்குக் காரணம்.

இவ்வாறு இலங்கை பஹாய் இயக்கத் தலைவரும் பிரபல அமெரிக்க இரசாயனவியல் விற்பன்னருமான திரு. சலோனர் சூட் அல்வாயில் நடைபெற்ற பஹாய் இயக்க மகாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் பேசுகையில் "உண்மைக்கு என்றும் அழிவில்லையென்றும் உண்மை எப்போதும் ஒன்றுதான் என்றும் அதுதான் கடவுள் என்றும் கூறினார்.

இலங்கை பஹாய் இயக்கச் செயலாளர் திரு. ஏ. சி. எம். பாசி, திரு. கே. குலரத்தினம், திரு. க. செ. சுவர்ணராஜ் ஆகியோருட்படப் பலர் பேசினர் இதைத் தொடர்ந்து வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு. க, துரைரத்தினமும் கலந்துகொண்டார்,

## 'இரத்தம் கொடுக்க அச்சமேன்?'

உடுப்பிட்டி, புதன்

"இரத்ததானம்என்றதும் அநேகர் பயந்த ஓடுகிறார்கள். வீண்நேரங்களில் விபத்துகளிலும் சண்டைகளிலும் பெருமளவு இரத்தத்தை வீணாக்குபவர்கள் தமது சகோதர மக்களின் உயிர்கள் பாதுகாக்கப்படுவதற்காகச் சிறுதுளி இரத்தத்தை தானஞ் செய்ய மாட்டார்கள். இது மிகவும் கேவலமானநிலை. யாழ்ப்பாண இரத்த வங்கியில் நோயாளர்களுக்குப் போதுமான இரத்தம் இல்லை. பொதுமக்கள் மனமிரங்கி உதவினாற்றான் நோயாளர்கள் குணப்படுவார்கள். இரத்தம் கொடுப்பதனால் சக்தி வீணாகிறது, பலவீனமேற்படும் என்று அநேகர் அஞ்சுகிறார்கள். ஆனால் டாக்டர்களின் கூற்றுப்படி இரத்தம் கொடுப்பதனால் பழைய இரத்தம் போய்ப் புதிய இரத்தம்ஏற்பட்டுச் சுறுசுறுப்பாக உடலை வைத்திருக்கிறது" இவ்வாறு கரவெட்டி வடக்கு கிராமசேவகர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற இரத்ததானத்தின்போது மாணவர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களும், நெல்லியடி சனசமூகநிலைய வாலிபர்களும் இரத்ததானம் செய்தனர். யாழ். இரத்தவங்கி அதிபர் அனைவருக்கும்நன்றி தெரிவித்தார்.

## உதவி போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் பதவி
### புதிய செயல் முறைக்கு ஆட்சேபம்

வெள்ளவத்தை, புதன்

தந்திச்சேவை பொறியியலாளர்களுக்கு உதவி போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் பதவியைக் கொடுப்பதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுப்பதை எங்கள் சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், எங்கள் சேவையில் மனநோவையும், அதிருப்தியையும் உண்டாக்காது உடனடியாக நீதியை நிலைநாட்டி திறமைக்கு இடமளிக்கும்படி எங்கள் சங்கம் உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது என்ற தந்தியொன்றைப் பிரதம மந்திரிக்கு கொழும்பு மாவட்ட ஐக்கிய தபால் தந்திச் சங்கக் காரியதரிசி திரு. எவ். பொன்னையா அனுப்பியுள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

வியட்னாமில் நடக்கும்யுத்தத்தில் அமெரிக்கா தலையிடுவதை எதிர்த்து இதுவரை மூன்று அமெரிக்கர் பிராணத்தியாகம் செய்திருக்கின்றார்கள். இம்மூவரும்தங்கள் உடம்பில் எண்ணெய்யை ஊற்றி தம்மைத் தாமே கொளுத்தி அக்கினிப்பிரவேசம் செய்து உயிர் நீத்தது அமெரிக்க வரலாற்றில் முன்னொருபோதும் நடந்திராத சம்பவம். இம்மென்னு முன்னர் சுழல் துப்பாக்கிகளை இழுத்து எதிர்த்தவர்களை துளைத்து விடுவதில் உலகப் பிரசித்திபெற்ற அமெரிக்கர், பிறருக்கு தீங்குசெய்யாமல் தம்மையே மாய்த்துக்கொள்வது மிகவும் ஆச்சரியமாயிருப்பது ஒருபுறமிருக்க, வஞ்சினத்துக்கும் பலோத்காரத்துக்கும் பேர்போன ஒரு நாட்டில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் இப்புதிய மர்மம் தோன்றியிருப்பது மேலும் ஆச்சரியமானது.

சர்வ வல்லமை மிக்கதாயிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அடிபணியச்செய்வதற்கு காந்திமகாத்மாபிரயோகித்தஆயுதங்கள் அஹிம்சை, ஒத்துழையாமை, சத்தியாக்கிரஹம், உண்ணாவிரதம்முதலியனவாம். தன்னிலும் பார்க்க பன்மடங்கு பலம்வாய்ந்த ஒரு எதிரியை தேகபலத்தாலும் ஆயுதபலத்தாலும் வெல்லமுடியாத பட்சத்தில் மேற்கூறிய ஆத்மீக எதிர்ப்பே சிறந்த ஆயுதம் என்பதை அவர் முதல்முதலாக உலகுக்குக் காட்டினார். முற்காலத்து முனிவர்களும் இருடிகளும் தங்களுடைய ஸ்தூல உடலைப்பல வித துன்பங்களுக் குள்ளாக்கி, தேக இன்பங்களைத் துறந்து, கடுந்தவம் இயற்றி தமக்குவேண்டிய வரங்களை பெற்றார்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். காந்தி முனிவரும் இந்த சூட்சுமத்தைக் கண்டுபிடித்து உண்ணாவிரதம் போன்ற கடினமான தவங்கள்செய்து தமது லட்சியத்தில் வெற்றி பெற்றார்.

அவர் இப்பொழுது உயிரோடு இருந்தால் எண்ணை ஊற்றி பிராணத் தியாகம் செய்யும் முறையை ஆமோதித்திருப்பாரோ என்னவோ

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ஆஸ்பத்திரியிலுள்ள தாதிகள், பேச்சுத் தமிழ் பரீட்சையில் சித்திபெறவேண்டுமென்று ஒரு நிபந்தனையுண்டு. அந்த நிபந்தனையை இப்போது நீக்கிவிடலாமென்று அரசாங்கம்உத்தரவிட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

இது உண்மையாயின், சிறப்பாக தென்னிலங்கை ஆஸ்பத்திரிகளிலுள்ள தமிழ் நோயாளருக்கு அதிக சங்கடம் ஏற்படுவதாக இருக்கும்.

நோயாளர் கூறுவதை அறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதே டாக்டர்கள் முதல் அடென்டர்கள்வரையிலுள்ள ஆஸ்பத்திரி ஊழியரின் முக்கியகடமை. தமிழ் நோயாளரில் பலருக்கும் சிங்களம் தெரியாது. அவர்கள் தமிழில் கூறுவதைத் தெரிந்து கொண்டால் தான் தாதிகள் முதலியோர் அவர்களுக்குத் தேவையானதைச் செய்ய முடியும். இக்காரணம் பற்றியே கொச்சைத் தமிழாவது தெரியவேண்டுமென்று நிபந்தனை போட்டிருந்தார்கள். இப்போது அந்த நிபந்தனையை ஏன் நீக்கவேண்டுமென்பது தெரியவில்லை.

ஃ ஃ ஃ

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலே சிலவருடங்களுக்கு முன் ஒரு தமிழ் நோயாளி பணம் கட்டும் வார்ட்டில் இருந்தார். அவருக்கு சிங்களம் தெரியாது. தமிழும் ஆங்கிலமும் தெரியும். தாதியையோ அடென்டரையோ அழைத்துப் பேசினால் அவர்கள் சிங்களத்திலேயே பேசுவர். தமிழ் தெரிந்தாலும் அதில் பேசுவதில்லை. நோயாளிக்கு எப்படி இருக்கும்? தமிழ் நிபந்தனை இருந்த காலத்திலேயே இப்படியென்றால் அதை நீக்கியபின் நிலைமை எவ்வளவு மோசமாகுமென்பதை விளக்கத் தேவையில்லை.

டாக்டர் உள்ளிட்டு ஆஸ்பத்திரி சிப்பந்திகள்எல்லாம் நோயாளருக்காகவே உள்ளனர். நோயாளருக்கு வேண்டிய பணியைச் செய்யவே அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துவைத்திருக்கிறது. இவ் ஆஸ்பத்திரியிலே சிகிச்சைக்காக பல சமூகத்தினரும் வருவதால், மூன்றுமுக்கிய மொழிகளும் ஓரளவாவது அச்சிப்பந்திகளுக்குத் தெரிந்திருக்க வேண்டியது மிக மிகஅவசியமாகும்.

நோயாளர் தமிழில் கூறுவதை தாதிகள் அறிந்துகொள்ள முடியாவிட்டால் அவர்கள் எப்படி தங்கள் கடமையைச் செய்யமுடியும்? அரசாங்க அதிகாரிகளில் யார் இந்த புதிய உத்தரவைப் போட்டனரென்பது தெரியவில்லை.

தேசிய மந்திரிசபை, தமிழருக்கு மொழிவிஷயத்தில் நியாயம் வழங்க ஆவலாக இருந்தும், சில மொழிவெறி அதிகாரிகள் பலஇலாகாக்களிலுமிருந்து விஷமம் செய்கிறார்களாம். இவர்களைப்பற்றி அரசாங்கம் மிக உஷாராக இருக்க வேண்டும்.

இதைப்பற்றி தமிழ் எம். பி.க்கள் உடன் கவனம் செலுத்தி, பிரதமரிடம் விளக்கி, இந்த உத்தரவை நீக்கி, தமிழ் நோயாளரின் நலனைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில்மட்டுமல்ல, அரசாங்க சிப்பந்திகள் அனைவருக்குமே மூன்று மொழிகளிலும் ஓரளவாவது தெரிந்திருக்கவேண்டுமென்ற கொள்கையை ஐ. தே. கட்சி முன்னர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்

(6-ம் பக்கம் பார்க்க)

ரொடீஷியா

# ஜரோப்பியர் பகுதியில் வெடிகுண்டு வீச்சு

## ரயில்கள் நிறுத்தப்பட்டன; பஸ்களுக்கு கல்வீச்சு

### பலாத்காரம் தலைதூக்குகிறது; ஆனால் பிரிட்டன் பலாத்காரம் உபயோகிக்காதாம்

ஸாலிஸ்பரி, நவ. 17

ரொடீஷியாவில் பலாத்கார சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன என்றும், நிலைமை நெருக்கடியாக இருப்பதாயும் இங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. கடும் செய்தித் தணிக்கை இருந்த போதிலும் பலாத்கார சம்பவங்கள் பற்றிய தகவல்கள் சிறிது வெளிவர ஆரம்பித்திருக்கின்றன,

தலைநகர் ஸலிஸ்பரியில் ஐரோப்பியர்வசிக்கும் பகுதியில் வெடி குண்டு ஒன்று வீசப்பட்டது. பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன என்றும், ரயில்கள் பல இடங்களில் நிறுத்தப்பட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது. பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை திடீரெனக் குறைந்து விட்டது. பொலிஸார் பலத்த ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். பெருமளவு பலாத்கார சம்பவங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

**கவர்னருக்கு தொடர்பு இல்லை**

கவர்னர் கிப்ஸுக்கு தந்திப் போக்கு வரத்துக்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. அவரது டெலிபோன் முடக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டனுக்கும் கவர்னருக்குமிடையேயுள்ள ஒரே தொடர்புஇரகசியரேடியோ மூலம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது.

முன்னாள் பிரதமர் திரு. கரிபீல்ட்டோட் கட்டுப்பாடான சூழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரது டெலிபோனும் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

**பிரிட்டனுக்கு விஸ்வாசம்**

கலகப் பிரதமர் ஸ்மித் நேற்று முழுவதும்தன்சகாக்களுடன் ஆலோசனை நடத்தினார். இதற்கிடையில் ஸ்மித்துக்கு விஸ்வாசம் தெரிவித்த 4,000 பேரடங்கிய தபால் யூனியன் ஊழியர்கள் இப்போது பிரிட்டனை தங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் இதர இலாகாக்களிலுள்ள 10,000 ஆபிரிக்கர்கள் அவர்களுடன் சேர்ந்துகொள்ளக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

**பொருளாதார எதிரொலி**

இதற்கிடையில் ரொடீஷியா சில பொருளாதார விளைவுகளை உணர ஆரம்பித்திருப் தாய்க் கூற படுகிறது.

ஆஸ்திரேலியா ரொடீஷியாவுடன் பொருளாதார உறவை வெட்டிக்கொண்டிருக்கிறது. ரொடீஷிய புகையிலைக்கு அது தடை விதித்திருக்கிறது. காமன்வெல்த் வர்த்தகத் தொடர்பையும் முறித்துக்கொண்டுவிட்டது. ஸலிஸ்பரியிலுள்ள ஆஸ்திரேலிய வர்த்தகக் கமிஷனர் திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அரசாங்கத்துக்கு வழங்கிய ரொடீஷியாபற்றிய விசேஷ அதிகாரத்தை மகாராணி அங்கிகரித்திருக்கிறார். பிரிவி கவுன்சிலும் விசேஷ சட்டத்தை அங்கிகரித்திருக்கிறது.

**பாதுகாப்பு சபை**

நேற்று ரொடீஷியாபற்றி பாதுகாப்பு சபைக் கூட்டம் நடைபெற்றது. பிரிட்டன் கையாளும் கொள்கையைக் கண்டித்திருக்கும் ஆபிரிக்க நாடுகளுக்குப் பதிலளிக்கும் முகமாக இன்று மீண்டும் சபையைக் கூட்டுமாறுபிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஸ்டுவர்ட் கேட்டிருக்கிறார்.

**பலாத்காரம் இல்லை**

ரொடீஷியாவில் பிரிட்டன் பலாத்காரத்தை உபயோகிக்க முடியாது என பிரதமர் வில்ஸன் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

எதியோப்பிய மன்னர் ஹெயிலிஸெலாஸி, 'தனது நாடு பலாத்காரம் உட்பட சகலசாதனங்களையும்ரொடீஷியா விஷயத்தில் உபயோகிக்கத் தாயாராயிருக்கிறது என அறிவித்தார்

நைரோபியில் கிழக்காபிரிக்கத் தலைவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் ரொடீஷிய தேசிய வாதிகளின் பலாத்காரப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

## பாக். ஹைகமிஷன் தாக்கப்பட்டது?

### நால்வருக்கு காயமாம்

ராவல்பிண்டி, நவ. 17

டில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதராலயத்தின்மீது இந்தியர்கள் கற்களை வீசினார்கள் என்றும், ஜனதிபதி அயூபைத் தூஷித்தார்கள் என்றும், 4 ஹைகமிஷன் அதிகாரிகளைத் தாக்கிப் படுகாயம் விளைவித்தார்கள் என்றும் பாகிஸ்தான் குற்றஞ் சாட்டியிருக்கிறது. இந்தியப் பொலிஸாரும் இதில் கலந்து கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

## பூட்டோ

ராவல்பிண்டி, நவ. 17

பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ, வெளிநாடுகளிலுள்ள பாகிஸ்தான் தூதர்களடங்கிய ஆலோசனை மகாநாடு ஒன்றை இன்று நடத்துகிறார்.

## கவர்னர்கள் மகாநாடு

புதுடில்லி, நவ. 17

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் இன்று கவர்னர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். இரு தினங்கள் நடைபெறவிருக்கும் இம் மகாநாடு பாதுகாப்பு, உணவு நிலைமை பற்றி ஆராயும். பிரதமர் சாஸ்திரி இம் மகாநாட்டில் பேசுவார்.

## 11,600 டன் புதிய கப்பல்

புதுடில்லி, நவ. 17

1966-ம் ஆண்டுக் கடைசியில் இந்திய கப்பல் கார்ப்பரேஷன் 5 லட்சம் டன்களுக்கு மேற்பட்ட கப்பல்களை உடைத்தாய் இருக்கும் என அறியப்பட்டது. போலந்தில் கட்டப்படும் இரண்டாவது கப்பலான 11 600 டன் நிறையுள்ள விஸ்வ கல்யாணி இப்போது வெள்ளோட்டம் விடப்பட்டிருக்கிறது. மொத்தம் 4 கப்பல்கள் போலந்தில் கட்கப்படவிருக்கிறது.

## பிரிட்டிஷ் ஹைகமிஷன் தாக்கப்பட்டது

ராவல்பிண்டி, நவ. 17

நேற்று டில்லியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷன்மீது ஆபிரிக்க, அராபிய, இந்திய மாணவர்கள் முட்டைகள், கற்கள், தக்காளிப் பழங்கள் ஆகியவற்ருல் தாக்கியதாயும், பிரிட்டிஷ் கொடியை கீழிறக்கியதாயும் பாகிஸ்தான் செய்தி ஒன்று கூறியது. பிரிட்டனின்ரொடீஷியா, ஏடன் கொள்கைகளை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாம்.

## அரசாங்கத்திலிருந்து கம்யூனிஸ்டுகள் நீக்கம்

ஜாகர்த்தா, நவ. 17

இந்தோனேஷிய அரசாங்க சேவையிலிருக்கும் எல்லா கம்யூனிஸ்டுகளையும், இடது சாரிகளையும் அகற்றும் படி ஜனதிபதி சுகர்ணோ உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இதற்கிடையில் மேலும் 7 பார்லிமெண்ட் அங்கத்தினர்களை சபாநாயகர் தடுத்து வைத்திருக்கிறார். ஏற்கனவே 65 பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்டாரா செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த 17 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவரையில் மொத்தம் இவ்வகையில் 56 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

## சர்ச்சில் நாடகம்

லண்டன், நவ. 17

சர்ச்சிலைப்பற்றிய புதிய நாடகம் ஒன்றை அவரது புதல்வி சாரா (நடிகை) 24 வயதான நடிகர் டேவிட் ஹெமிங்ஸுடன் சேர்ந்து தயாரித்து வருகிறார். இருவரும் இந்த நாடகத்தை எழுதி வருகிறார்கள். புது வருடம் லண்டன் தியேட்டர்களில் இது திரையிடப்படும். (பி.டி.ஸி.

## சோவியத் ஆதரவிலும் காஷ்மீர் பற்றிய பேச்சு பலனளிக்காது

### அயூப் - சாஸ்திரி சந்திப்பு பற்றி இந்தியப் பிரதமர்

புதுடில்லி, நவ. 17

சோவியத் நல்லாதரவில் ஜனதிபதி அயூபுடன் காஷ்மீர்பற்றிப் பேச்சு நடைபெறுவதானல் அதனல் பயனில்லை என்றும் இரு நாடுகளுக்குமிடையே பொதுவான உறவுபற்றியே இத்தகைய பேச்சுகள் நடைபெற முடியும் என்றும் பிரதமர் சாஸ்திரி அறிவித்திருக்கிறார்.

''பாகிஸ்தான் இந்தமுறை ஊடுருவல் செய்யுமானல் அது சகிக்கப்படமாட்டாது. எந்த நிர்ப்பந்தமும், தாக்குதலும் பலமாக முறியடிக்கப்படும்'' என்றும் அவர் கூறினர்.

''சிக்கிம் எல்லையில் சீனர்கள் சமீபத்தில் நடத்திய தாக்குதலின் உள்ளர்த்தம் தெரியவில்லை. ஆனல்பாகிஸ்தானும் சீனவும் கூட்டுத் தாக்குதல் நடத்துமானல் இரு போர்முனைகளில் போராடும் சிரமம் நமக்கு ஏற்படும். பாகிஸ்தானிடம் அணுகுண்டு இல்லை. சீன அணுக்குண்டை உபயோகித்தால் என்ன விளைவு ஏற்படும் என்பது அதற்குத் தெரியும். எப்படியானலும் இரு முனைகளிலும் நிலைமையைச் சமாளிக்க இந்தியா தயார்'' என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

இதற்கிடையில் கிழக்குப் பாகிஸ்தானில் குளியா, ஜகூர் எல்லைகளில் பெருமளவு பாகிஸ்தான் துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாயும், பல இராணுவத் தளங்கள்நிறுவப்பட்டிருப்பதாயும் புதிய ரயில்பாதை போடப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## சுகர்ணேவின் சுயசாிதம்

நியூயோர்க், நவ. 17

உயர் பதவியின் தலையிடிகள் தமக்கு ஒடு பிரச்னையாக இல்லை என ஜனதிபதி சுகர்ணே இங்கு பிரசுரிக்கப்பட்ட தம் சுயசரித்திரத்தில் கூறியிருக்கிறார்.

''எனது டாக்டர்கள் ஒவ்வொரு வாரமும் நான் அதிகம் கத்தாமல் அமைதியாக இருந்தால் இவ்வித நோய்கள் ஏற்படாது எனக் கூறியிருக்கிறார்கள். நான் கத்தும்போது கோபத்தைப் பொழிகிறேன் என்றும்அவர்கள் கூறுகிறார்கள். ஆனல் ஒவ்வொரு ஐந்து நிமிஷத்துக்கிடையிலும் கெட்ட செய்திகள் வரும்போது எப்படி என்னல் கத்தாமலிருக்க முடியும்? நெருக்கடியிலிருந்து விடுபடுமுகமாகவே நான் கூச்சலிடுகிறேன்'' என்றும் சுகர்ணே கூறியிருக்கிறார்.

அமெரிக்க பெண் எழுத்தாளர் சிந்தே ஆடம்ஸிடம் சுகர்ணே கூறியிருக்கிறார். எந்த நிர்ப்பந்தம் காரணமாகவும் தாம் ராஜினமா செய்ய விரும்பவில்லை என்றும் இறுதி நாட்களை அமைதியாகவோ, கொலைமுயற்சி பயத்தினலோ என்னல் கழிக்க முடியாது'' என்றும் சுகர்ணே கூறினர்.

(பி. டி. ஸி.)

ஐ. நா. வில்

## சீனபற்றி இன்றும் விவாதம்

நியூயோர்க், நவ 17

ஐ. நா. பொதுச்சபை கூட்டம் சீன பற்றி எவ்வித முடிவும் செய்யாமல் நேற்றுக் கலைந்தது. இன்று விஷயம் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

## பச்சைவர்ண பாகிஸ்தான் கப்பல்

புதுடில்லி, நவ. 17

பாகிஸ்தான் கைப்பற்றிய இரு பாரத கப்பல்களுக்கு பச்சை வர்ணம் தீட்டி, பாகிஸ்தான் கொடிகள் போட்டு போக்குவரத்து சேவைக்கு அது உபயோகித்து வருவதாய்க் கூறப்பட்டது.

## 500 கோடி முதலீடு

புதுடில்லி, நவ. 17

அடுத்த ஆண்டு தொழில் முதலீடு 500 கோடி ரூபாயாக இருக்கும். இதில் ரூ. 135 கோடி அந்நிய உதவி என அறிவிக்கப்படுகிறது.

## யுதாண்ட்

நியூயோர்க், நவ. 17

படைவிலக்கம் சம்பந்தமாக தமது பிரதிநிதி ஒருவரை நியமிப்பது குறித்து யுதாண்ட் இந்திய - பாகிஸ்தான் அரசாங்கங்களுடன் ஆலோசனை நடத்திவருகிறார்.

பாகிஸ்தான் மாணவர்

## பிரிட்டிஷ் மந்திரியை எதிர்த்து போட்டி.

லண்டன், நவ. 17

22 வயதான பாகிஸ்தானிய சட்ட மாணவன் டாரிக் அலி, அடுத்த பொதுத்தேர்தலில் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. மைக்கேல் ஸ்டுவர்ட்டை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுவார் என புதிதாக நிறுவப்பட்ட ''ரெடிகல் அலயன்ஸ்'' கட்சி அறிவித்திருக்கிறது: திரு. அலி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக யூனியனின் (விவாதசங்கம்) முன்னாள் தலைவர் அரசாங்கத்தின் குடியேற்றக்கொள்கையையும், பாதுகாப்புக் கொள்கையையும் கண்டிக்கும் ரெடிக்கல் கட்சியின் முதலாவது பாராளுமன்ற அபேட்சகராக திரு. அலி நிற்கிறார். தங்களுக்கு சமாதானத்திலும், அணு எதிர்ப்பிலும் பிரபலம்வாய்ந்த பலரின் ஆதரவு இருப்பதாக புதிய கட்சி அறிவித்தது. திரு. ஸ்டுவர்ட் கடந்த தேர்தலில் கன்சர்வேட்டிவ் அபேட்சகருடன் நேரடிப் போட்டியிலீடுபட்டு லண்டன் புல்ஹாம் தொகுதியில் 5000 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார்.

## 900 பேர் பலி!

சைக்கோன், நவ. 17

கம்போடிய எல்லையில் கடந்த 3 நாட்கள் நடைபெற்ற போரில் அமெரிக்க மாலுமித் துருப்புக்கள், 900 வியட்காங்கியரைக் கொன்றிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியா.

நான்கு டிராம் வடிசாராயம் வைத்திருந்ததாகவும், 502 டிராம் கோடாவைத்திருந்ததாகவும், வடிசாராய உபகரணங்கள் வைத்திருந்ததாகவும் சின்னையா என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் எல்லா குற்றச்சாட்டுகளுக்குமாக 250 ரூபா அபராதம் விதித்தார்.

ஃ ஃ ஃ

136 டிராம் கோடாவைத்திருந்ததாக காசியன் மார்க்கண்டுமீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் 125 ரூபா அபராதம் விதித்தார்.

## டிவேலரா தேர்தலுக்கு நிற்பார்

டப்ளின், நவ. 17

ஐரிஷ் ஜனாதிபதி டிவேலரா அடுத்த ஏழாண்டுகளுக்கு இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கிறார். அவருக்கு தற்போது 83 வயது.

## பால் சபைக்கு அபிவிருத்தித் திட்டம்

பம்பலப்பிட்டி, புதன்

பால்சபையை அபிவிருத்தி செய்வதற்கான 5 வருட திட்டமொன்று உலகவங்கி நிபுணர்களால் தயாரிக்கப்பட்டுவருகிறது.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Columbia's
ADVICE
&
CONSENT
(Panavision)

## மேலும் இருவர் தற்காலிக பதவிநீக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் கீழ் வேலைசெய்யும் இரு உணவுக கட்டுப்பாட்டு அதிகாரிகள் அரசாங்க அதிபரினால் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்களெனத் தெரியவருகிறது. இவ்விருவருடைய தினக்குறிப்புப் புத்தகங்களும் சில வாரங்களுக்கு முன்னரே அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் அவர்களிடம் கையளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தமாக ஆறு உணவுக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் யாழ்ப்பான மாவட்டத்தில் கடமையாற்றுகின்றனர். சில மாதங்களுக்கு முன்னர் ஒருவரும் தற்பொழுது இருவரும் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்பொழுது வேலைநீக்கம் செய்யப்பட்ட பரிசோதகர்கள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியினால் குறிக்கப்படாத வேலையில் ஈடுபட்டதன் காரணமாகவே இவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

## நாவலர்விழா

யாழ்ப்பாணம், வியாழன்

நாவலர்தினவிழாவை அடுத்தமாதம் 14-ம் திகதி சிறப்புடன் கொண்டாடுவதென வும் அத்தினத்தையொட்டி பேச்சு, திருமுறைப் போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதென வும் வண்ணை நாவலர் வித்தியாசாலை ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

## கி. ச. தலைவரின் ஆட்சேப மகஜர்

யாழ்ப்பாணம், வியா.

கிளிநொச்சி கிராமசபைக்கு பட்டினசபை வழங்கும் உத்தேச தீர்மானம்குறித்து அது நியாயத்துக்கு முரணானது என்றும் அதற்கு சான்றாகபல விஷயங்களை எடுத்துக்கூறும் மகஜர் ஒன்றை கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி பிரதமருக்கும், ஏனையமந்திரிகளுக்கும், சகலஎம். பிக்களுக்கும், செனட்டர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## 6 நெசவாலைகள் நிறுவ துரித முயற்சி

பருத்தித்துறை, புதன்

சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த நெல்லண்டை (தும்பளை)யில் இயந்திர நெசவாலை ஒன்று நிறுவப்பட விருப்பதாயும் இதற்கான உதவியைப்பெற பருத்தித்துறைஎம். பி. திரு. க. துரைரத்தினம் அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளார் எனவும் தெரிய வருகிறது.

நெசவாலை நிறுவுவதற்கான காணி பெறப்பட்டு விட்டதாகவும் இதைத் தொடர்ந்து ஆறு நெசவாலைகள் இத்தொகுதியில் விரைவில் நிறுவப்பட இருப்பதாயும் கூறப்படுகிறது.

## கொக்குவில் புலவரின் 70-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

கொக்குவில் திரு. த. குமாரசுவாமிப்புலவரின் 70-வது ஆண்டுப் பூர்த்தி விழாவை சிறப்புடன் கொண்டாடுவதென யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலையை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் சபை தர்மகாரியங்களைச் செய்வதற்கு ஓர் லிகிதரை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

## பௌத்த மகாநாடு

பம்பலப்பிட்டி, புதன்

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அதன் 47-வது ஆண்டு விழாவை அடுத்த மாதம் 24-ம், 25-ம், 26-ம் திகதிகளில் பண்டாரவளையில் நடாத்தவிருக்கிறது.

200 பிரதிநிதிகளும், 300 பௌத்த சங்கங்களும் இந்த மகாநாட்டில் பங்குபற்றும்.

## மான்யம் குறைக்கப்பட்டது

பம்பலப்பிட்டி, புதன்

1965-ம் ஆண்டிற்கு பழுது பார்க்கும் வேலைகள் சம்பந்தமான மதிப்பீட்டை பொருளாதாரப் பிரச்னையை முன்னிட்டு குறைப்பதென புகையிரதப் பகுதி இலாகா முடிவு செய்துள்ளது.

## 'அஞ்சமாட்டேன்' — சிறிமா

நுககொடை, புதன்

'நான் ஒரு பெண்ணாக இருந்தபோதிலும் பின்னேக்கிச் செல்லப்போவதுமில்லை; யு. என். பி. பிற்போக்கு வாதசக்திகளைக் கண்டு அஞ்சப்போவதுமில்லை' என எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா நுகேகொடையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

## பின்தங்கிய ஸ்தலஸ்தாபனங்களுக்கு கூடுதலான பண உதவி

### மந்திரி திருச்செல்வம் உறுதி

வவனியா, புதன்

''வவனியா எம். பி. யும் நானும் தடுப்புக்காவல் நேரத்தில் ஒன்றாக இருந்தோம், அவரும் நானும் பலதடவைகளில் ஒன்றாக தமிழ் மக்களின் கஷ்டங்கள் பற்றி நன்குஆராய்ந்தோம். அரசியல் சூழ்நிலைகள் கடந்த பலகாலமாக தமிழ் மக்களின் உரிமையை தடுத்துவந்துவிட்டன. ஆனால் டட்லி அரசாங்கம் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் பூரணமாகக் கொடுக்கும். அப்படிக்கொடுக்காத பட்சத்தில் எதிர் நடவடிக்கையை நாங்கள் கூட்டாக மேற்கொள்வோம். தமிழ் மொழி வடக்கு கிழக்கு மாகாணங்களில் விரைவில் நிர்வாக மொழியாக பிரகடனப்படுத்தப்படும். இது நடக்காவிட்டால் நாம் அரசாங்கத்தில் இருந்தும் பயனில்லை.''

இவ்வாறு அண்மையில் வவனியாநகரமண்டபத்தில் நகரசபைத்தலைவர் திரு. ம. பொன்னையா தலைமையில் நடைபெற்ற உள்ளூராட்சி தலைவர்களைக் கொண்ட மகாநாட்டில் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் கூறினார்.

அவர்தொடர்ந்துகூறியதாவது:- இனிமேல் பின்தங்கிற உள்ளூராட்சிமன்றங்களுக்கு கூடிய பணஉதவி நன்கொடையாகஉதவிஅளிக்கதிட்டமிட்டுள்ளேன். இஸ்ரேல் நிபுணர்களின் உதவியுடன் 3 மாதத்துக்குள் குழாய் கிணறுத் திட்டம் இங்கு பூர்த்தியாக்கப்பட்டுவிடும்.

### கஷ்டம் நீங்கியது

வவனியா மக்கள் இது காலவரையும் உரிமைஇன்றி மந்திரியின் முகத்தைக்கூட பார்க்க முடியாது இருந்தனர். ஆனால் இனிமேல் நேரடியாக தங்களின் கஷ்டத்தை எடுத்துக்கூற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: வடபகுதியில் உள்ளவர்கள் இவ்விடத்தில் வந்து குடியேறி வாழவேண்டும் படிக்க நல்ல பாடசாலையின்றி மருந்தெடுக்கற்நல்ல ஆஸபத்திரி இல்லாத இந்த இடத்தை மந்திரி நல்ல வளமாக்கி தருவார் என்பதில் ஐயமில்லை,''

## தடையைநீக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

தோட்டப் பயிர்களுக்கு பிரதானமாக புகையிலைச் செடிக்கு உபயோகிக்கப்படும் 'பொலிடோல்' என்னும் கிருமிநாசினியின் இறக்குமதி தடையை நீக்குதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமாறு இணுவில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. கே. கந்தையாவை தலைவராகக் கொண்ட தூதுகோஷ்டி பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினத்தைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

பம்பாய் வெண்காயம், உருளைக்குழங்கு முதலிய செய்கைகளில் கமக்காரர்கள் ஈடுபட வேண்டுமென்றும், எந்தெந்த நிலத்தில் எந்தவகையான பயிர்கள் செய்யப்பட வேண்டுமென்ற ஆராய்ச்சி நிலையமொன்றை அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்க வேண்டுமென்றுதான் கோரிவருவதாகவும் திரு. துரைரத்தினம் தெரிவித்தார்.

## உருவப்படம் திரைநீக்கம்

கண்டி, புதன்

கண்டி சைவ மகாசபையின் முன்னேற்றத்திற்காக அரும்பணி புரிந்த இராசவாசல் முதலியார் என். கனகநாயகம், புறக்டர் திரு. பி. பாலசிங்கம், முதலியார் இரங்கநாதன் ஆகியோரின் உருவப்படங்களை ஸ்தலஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் மகாசபை மண்டபத்தில் இம்மாதம் 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திரைநீக்கம் செய்து வைப்பார்.

இவ் வைபவத்தில் உதவி நிதி மந்திரி திரு. என். விமலசேன, வத்துகம எம். பி. திரு. பி. பி. ஏ. வீரக்கோன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

## வேலைநிறுத்த சம்பவம் பற்றி விசாரணை

பம்பலப்பிட்டி, புதன்

கண்டி இ. போ. ச. ஊழியர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை வேலைநிறுத்தம்செய்ததற்குக் காரணமாயிருந்த சம்பவம்பற்றி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலேறிக் அபயகுணவர்த்தன (இரகசியபொலிஸ் பிரிவு) விசாரணை நடத்த உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர், இ.போ.ச. சாரதி திரு. ஜே. என். செனிவரத்ன என்பவரைத் தாக்கியதாகவும் இதைத் தொடர்ந்தே வேலைநிறுத்தம் இடம்பெற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "பெண்கள் வழி காட்டவேண்டும்"

கைதடி, புதன்

கைதடி-நாவற்குழிதெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓராண்டுநிறைவு விழா சமீபத்தில் கைதடி-நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் பாடசாலையில் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. க. சிவப்பிரகாசம் தலைமையின்கீழ் நடைபெற்றது.

தலைவர் உரையின்போது, பெண்கள் சமூகம் பின் நிற்காமல் முன்னேற்றப் பாதையில் செல்லத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந, நவரத்தினம் பேசுகையில், கூட்டுறவின் நாட்டத்தால் உந்தப்பட்ட மக்கள் ஒற்றுமையைத் தாரகமந்திரமாகப் பெற்று படிப்படியாக முன்னேற்றம் அடைந்துள்ளார்கள் என்பதை நாம் சரித்திரவாயிலாக அறிகின்றோம். தாம் வாழும் கிராமத்தின் வளர்ச்சிக்காக மக்கள் தமது விடாமுயற்சியினால் சிறு சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து நாட்டில் இன்பமுற்று வாழ்வதோடு, இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டுமெனவும் கூறினார்.

புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:-


தலைவர்: திரு. க. சதாசிவம். உப தலைவர்: திரு. செ. முத்துலிங்கம். காரியதரிசி: திரு. வே. பொன்னம்பலம். உப காரியதரிசி: திரு. வே. இராமர். ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்காராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னா, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்ட்மென்கலர்)

## விளம்பரம்

புலோலி
**ஆண்கள் ஆங்கில பாடசாலை**
பருத்தித்துறை

7-ம், 8-ம் வகுப்புகள், க. பொ. த. ஆரம்பவகுப்பு (கலை, விஞ்ஞானம்) ஆகியவற்றில் சில இடங்கள் இருக்கின்றன. விண்ணப்பஞ் செய்யவிரும்புவோர் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் பாடசாலை விளம்பரப் பலகையில் பார்த்து எழுதி, அதை நிரப்பி 15-12-65 க்கு முன் அனுப்பவேண்டும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மு. ஆ. தங்கராசா,
அதிபர்.

15-11-1965. 1258

## முக்கிய அறிவித்தல்

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவிலுக்கு அனுபவம் வாய்ந்த குருக்கள் தேவையென 'ஈழநாடு' பத்திரிகையில் 15-ம் திகதி விளம்பரப் படுத்தியுள்ளேன். இதை மறுத்து பூசை உரிமைக் குருக்கள்மார் எனக் கைச்சாத்திட்டு ஒரு முக்கிய அறிவிப்பைப் பார்த்தேன். அதில் இரண்டாவது குருக்களை நியமிக்க எனக்கு உரிமையில்லை என்று காட்டியுள்ளனர்.

இக்கோவிலில் பூசை, விசேடக் கிரியைகள், வேத அத்தியயனம், பத்ததி வாசித்தல் முதலிய கருமங்கள் செய்ய இக்கோவிலின் உரிமைபற்றுஅற்ற ஒரு குருக்கள் இருப்பது சாலச் சிறந்தது என அநேகர் கருதியுள்ளனர். இதில் பெரும் உண்மையிருப்பதை நானும் உணர்கிறேன். இரண்டாம் குருக்கள் நியமிப்பது நிர்வாகத்தின் உரிமை. இதைத் தடைசெய்ய பூசை உரிமைக்காரருக்கு எதுவித அதிகாரமும் இல்லை. இந்நியமனம் பூசை உரிமைக்காரரைப் பாதிக்கமாட்டாது. ஆனால் இங்கு வழிபடவரும் பக்தர்களுக்கு ஆதரவும், அன்பும், இஷ்டசித்தியும் கிடைக்க வழிகோலவும் இக்கோவிலின் முன்னேற்றத்திற்குப் பக்தர்கள் முயற்சி எடுத்துத் திருப்பணி முதலியவற்றைச் செய்ய இங்குள்ள சில பூசை உரிமைக்காரரும், உரிமையற்ற இனத்தவரும் இதற்குத் தடையாயிருக்கிறார்கள். இதனுற்றான் இங்ஙனமான நியமனம் செய்ய உத்தேசித்துள்ளேன்.

ஆலயத்திற்கு வழிபட வருவோர் திருப்தியுடன் வீடு செல்ல என்னாலான முயற்சிகளை நீதிமன்றம் எனக்களித்த அதிகாரத்தின்படி செய்யத் தயங்கமாட்டேன். ஒரு தர்மகர்த்தாவின் முக்கிய கடமை இது என்பதை யாவரும் அறிவர்.

சு. துரைசாமிக்குருக்கள்'
டிை கோவில் ஆதீனகர்த்தா.

## வானொலி

### கொழும்பு

வியாழன் 18-11-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

34- மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 சிறுகதை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 விமர்சனம், 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வயலின், 9-30 நேயர் விருப்பம், 10-00 இசையமுதம்.

# விளையாட்டுப் பகுதி

## வவனியா வட்டார பாடசாலைப் போட்டிகள்

வவனியா, புதன்

''இயல், இசை, நாடகம் போன்றவற்றில் மாணவ, மாணவிகள் அதிக கவனம் எடுக்கவேண்டும். இவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் நாமும் முன்னேறி கல்வியும் வளர்ச்சியடையும்'' என்று வவனியா தமிழ் ஆசிரியர்சங்கத்தினால் நடாத்தப்பட்ட வட்டாரப் பாடசாலைகளின் சங்கீத நடன, நாடகப்போட்டிக்கு தலைமை வகித்துப் பேசும்போது திரு. மு கோதிசிந்தாமணி கூறினார்.

போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

தனிப்பாடல்: ஓமந்தை மகாவித்தியாலயம், சைவப்பிரகாசவித்தியாசாலை வவனியா.

கோலாட்டம்: ஓமந்தை மகாவித்தியாலயம், பூவரசங்குளம் அ. த. க. பாடசாலை.

கூட்டுப்பாடல்: ஓமந்தை மகாவித்தியாலயம், வெளிக்குளம் அ. த. க. பாடசாலை.

பாலர் அபிநயப்பாட்டு: வவனியா த. சி. சி. த. க. பாடசாலை, பன்றிக்கெய்தகுளம் அ. த. க. பாடசாலை.

கும்மி: வவனியா தமிழ் மகாவித்தியாலயம், நம்பைக்குளம் றே. க. க. பாடசாலை.

கிராமியநடனம்: வவனியா தமிழ் மகாவித்தியாலயம், நொச்சிக்குளம் பாடசாலை, நம்பைக்குளம் றே. க. பாடசாலை.

நடனம்: ஓமந்தை தமிழ் மகாவித்தியாலயம், வவனியா தமிழ் மகாவித்தியாலயம்.

தமிழ் நாடகம்: நொச்சிமோட்டை றே. க. பாடசாலை.

காவடி: வவனியா சி. சி. பாடசாலை.

கெண்டிப்பாடல் ஆங்கிலம்: வவனியா தமிழ் மகாவித்தியாலம்.

ஆங்கில நாடகம்: தமிழ் மகாவித்தியாலயம்.

## பண்டத்தரிப்பு வெற்றி

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி 'பி' பிரிவு கோஷ்டிக்கும் காரைநகர் இந்துக்கல்லூரி 'பி' பிரிவு கோஷ்டிக்குமிடையில் சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிபபு இந்துக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றி பெற்றன. போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## சென். தோமஸ் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

மாதகல் சென். தோமஸ் கோஷ்டியினருக்கும் சண்டிலிப்பாய் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். தோமஸ் 3—0 கோல்களால் சண்டிலிப்பாய் கோஷ்டியை தோற்கடித்தது. இப் போட்டிக்கு திரு. எல். ஏ. யோசவ் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

## சிறப்பான விளையாட்டு

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சனசமூக நிலையக்கோஷ்டிக்கும் நல்லூர் சிருப்பர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், சனசமூகநிலையக் கோஷ்டி 'சிருப்பர்' கோஷ்டியை கடுமையான போட்டியின் பின்னர் வெகு சிரமப்பட்டுத் தோற்கடித்தது. நல்லூர் சிருப்பர் கோஷ்டிக்கு எம். பற்குணமும் சனசமூகநிலையக் கோஷ்டிக்கு ஏ. திலகராசாவும் முறையே கோஷ்டித் தலைவர்களாகப் போட்டியிட்டனர்.

இடைவேளைக்கு முன் நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டியுமே ஒரு கோலும் போடவில்லை. போட்டி வெகு ரசிப்பாகவும், காரசாரமானதாகவும் காணப்பட்டது,

இடைவேளைக்குப்பின் நடந்த போட்டியில் தகாத முறையில் விளையாடியதற்காக சிருப்பர் கோஷ்டி வீரனை உலகநாதன் மத்தியஸ்தரால் வெளியேற்றப்பட்டார். சனசமூகநிலையக் கோஷ்டியில் எஸ். துரைராசா, எஸ். முத்துராசா, எஸ். திருநீலகண்டன் ஆகிய முன்னணி வீரர்கள் சிறந்த 'பாசிங்' செய்து வெற்றிகரமாக முதலாவது கோலை வௌுத்துவாங்கினர்.

சிருப்பர் கோஷ்டியின் பின்னணி வீரரான எம். பற்குணம் எதிர் கோஷ்டி கொண்டுவந்த பந்துகளை எல்லாம் ஒரே அடியில் பாராட்டத்தக்க விதத்தில் திருப்பி அனுப்பினர். சிருப்பர் கோஷ்டியின் கோல்காப்பாளனன சாம் செல்வர் பாராட்டத்தக்க விதத்தில் பந்துகளைத் தாவிப் பிடித்து அற்புதமாக விளையாடினர். முடிவில் சனசமூகநிலையக் கோஷ்டி நல்லூர் சிருப்பர் கோஷ்டியை 1-0 கோலால் வெற்றியீட்டியது. சன சமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சின்னத்துரை துரைராசா மத்தியஸ்தம் வகித்தார்.

## இரு போட்டிகளிலும் நல்லூர்தெற்கு வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

சுண்டிக்குளிக் கோஷ்டியினருக்கும் நல்லூர் தெற்கு சனசமூகக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது தடவை கைப்பந்தாட்டப் போட்டியிலும், இதைஅடுத்து நடைபெற்ற ஸ்ரீ முருகன் கோஷ்டிக்கு எதிரான கைப்பந்தாட்டப்போட்டியிலும் சனசமூகநிலையவீரர்கள் வெற்றியீட்டினர். முதலில் சுண்டிக்குளி கோஷ்டியினருடன் நடைபெற்ற முதலாவது போட்டியில்; ஒரு ஆட்டத்தில் சுண்டிக்குளி வீராகளும் இரண்டு ஆட்டங்களில் சனசமூகநிலைய கோஷ்டியும் வெற்றிபெற்றன. சனசமூக நிலையக் கோஷ்டிக்கு சு. முத்துராஜாவும் சுண்டிக்குளி கோஷ்டிக்கு இ இராசாவும் தலைமைதாங்கினர். இரு கோஷ்டியுமே பாராட்டத்தக்கதாக திறமையாக போட்டியிட்டதுகுறிப்பிடத்தக்கது. சனசமூகநிலைய கோஷ்டியில் எஸ். சீவரத்தினம், எல். உலகநாதன், எஸ். துரைராஜா ஆகியோர் மின்னல் வேகத்தில் பந்தை அடித்து போட்டியை விறுவிறுப்படையச் செய்தனர். எப். பற்குணத்தின் அற்புமான விளையாட்டை எதிர்ப்புற வீரர்களும் பாராட்டினர். சுண்டிக்குளிக்கோஷ்டியில் சூரியகுமார், நந்தகுமார், பரமசிவம் ஆகியோர் திறமையாக விளையாடினர். இதை அடுத்து சனசமூகநிலைய வீரர்கள் ஸ்ரீ முருகன் கோஷ்டியுடன் மோதினர். அடுத்து இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று ஸ்ரீமுருகன் கோஷ்டியை சனசமூக நிலையக் கோஷ்டி வெற்றியீட்டியது. ஸ்ரீமுருகன் கோஷ்டித் தலைவரான மா. நடராசா பலவிதத்திலும் அகோரமாகவும், அபாரமாகவும் போட்டியிட்டார். இவரை அடுத்து இவரது கோஷ்டி வீரர்களான சுந்தரேசன், சில்வஸ்ரர், பரமசாமி, பரமநாதன் ஆகியோர் மிகவும் அற்புதமாகவும் அழகாகவும் அருமையாக அடித்து ரசிகரின் பாராட்டைப் பெற்றனர். இவர்கள் தோல்வியுற்றபோதும் ஒரு ஆட்டத்தில் வெற்றியீட்டியது பாராட்டத்தக்கதாகும். சனசமூகநிலைய மைதானத்தில் நடந்த இப்போட்டிகளுக்கு திரு. சின்னத்துரை துரைராசா மத்தியஸ்தம் வகித்தார்.

## பாடசாலை மாணவர் களைபிடுங்கும் இயக்கம்

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களின் களைபிடுங்கும் வேலை நேற்று ஆரம்பமானது. வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாணவர்கள் நேற்று வட்டுக்கோட்டையிலுள்ள ஒரு வயலில் களை பிடுங்கினர். இவ்வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. செ. சின்னத்தம்பி மாணவர் மத்தியில் விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினர்.

### புலோலியில்

புலோலி தெற்கு மெதடிஸ்த பாடசாலையைச் சேர்ந்த 20 மாணவர்கள் நேற்று விவசாயத்துறைப் பயிற்சியின் அடிப்படையிலான களைபிடுங்கும் சேவையில் ஈடுபட்டனர்.

இவ் மாணவர் கோஷ்டி இவ்வாரம் முழுதும் இச் சேவையில் ஈடுபடுவர்எனத் தெரியவருகிறது.

### முரசுமோட்டையில்

முரசுமோட்டை முருகானந்த வித்தியாசாலை மாணவர்கள் களைபிடுங்கும் இயக்கத்தில் ஈடுபட்டனர்.

கண்டிப் பயிர்ச்செய்கைக் குழுஆதரவில் திரு. அருளம்பலம் களைபிடுங்கு விழாவை ஆரம்பித்துவைத்தார்.

கமத்தொழில் ஆக்க உதவி ஆணையாளர். எஸ். சிவசிதம்பரம் கமத்தொழில் இலாகா உத்தியோகத்தர்களான திருவாளர்கள்ரி. பெர்ணன்டோ பாலகணபதி ஆகியோரும் கிராமசேவையாளரும் இதனை முன்னின்று நடத்தினர்.

## சுக்கிர ராக்கெட்

மாஸ்கோ, நவ. 17

ரஷ்யா சுக்கிரனை நோக்கி இரண்டாவது ராக்கெட் ஒன்றைச் செலுத்தியிருக்கிறது. கடந்த 5 தினங்களுக்குள் செலுத்தப்பட்ட இரண்டாவது ராக்கெட் இது.

## வரிவிளம்பரம்

**வைத்தியம்**

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக்இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவில்லை. ஆனல் பிறருக்கு எவ்வித கெடுதியுமின்றி தன்னைத்தானே இம்சித்துக் கொள்ளும் முறையில் அக்கினிப்பிரவேசம் செய்து தற்கொலைசெய்வது இறுதியான கட்டமென்று கூறலாமல்லவா?

காந்திஜீயின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இந் நவீனமார்க்கம் இப்பொழுது உலகமெங்கும் பரவிவருகிறது. தமிழ்நாட்டில் ஹிந்தித்திணிப்பை எதிர்த்து வாலிபர் பலர் தீயில் மூழ்கினர். சைகோன் நகரத்தில் புத்தபிக்குகள் சிலர் தீயில்குதித்தனர். இப்பொழுது அமெரிக்கரே தங்கள் அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து பெட்ரோலில் தங்களை எரித்துக் கொண்டனர், இந்த உயிர்த்தியாகத்தால் பயன் ஏற்படுமா?

ஃ ஃ ஃ

'ஆஸ்பத்திரியில் எருமைகள்' என்று தலைப்பிட்ட புதினச் செய்தியைப் பார்த்ததும் 'எமனேறும் பரிகள்' ஆஸ்பத்திரிகளில் உலாவித் திரிவதில் என்ன புதினம் இருக்கிறது என்று முதலில் நினைத்தேன். ஆனல் நான் நினைத்தது தவறு. ஆஸ்பத்திரிக் கட்டடம் ஒன்றைச் சில நிஜமான, நாலுகால் எருமைகள் தங்கள் வாசஸ்தலமாக்கிக் கொண்டனவாம். அவ்வளவுதான்

எருமைகள் முரட்டு சுபாவத்துக்குப் பேர்போனவை. அத்துடன் சோம்பல், திமிர், அக்கறையின்மை, அசட்டுத்தனம், சுயநலம், உணர்ச்சியினம் இவையெல்லாம் எருமையின் சிறந்த குணதிசயங்கள். எருமைத் தோலில் மழை, வெய்யில், பனி, துப்பாக்கிக்குண்டு முதலியவை ஊடுருவுவது கடினம். ஏன் மனிதர்களில் சிலரை 'எருமைத் தோலன்' என்று அழைக்கிறேமல்லவா?

ஆஸ்பத்திரிகளிலுள்ள சில இரண்டு கால் எருமைகளுக்கும் மேற்படி வர்ணனைகள் அச்சொட்டாகப் பொருந்துமாதலால், 'ஆஸ்பத்திரியில் எருமைகள்' என்ற தலைப்பு சர்வசாதாரணமான ஓர் உண்மையைத் தெரிவிக்கிறதேயன்றி அதில் புதினம் எதுவும் இல்லையேயென்று முதலில் நினைத்தேன்.

உயிருக்கு மன்றுடும் நோயாளிகளுக்கு வேண்டிய நேரம் மருந்து கொடுக்காமல், இருக்கிற மருந்தை கள்ள மார்க்கெட்டில் விற்பதும், தாய்ப்பாலில்லாது குழந்தைகளுக்கு உயிர் கொடுக்கும் பாலுணவுகளை பிறர்கண்ணில் படாமல் பதுக்கிவைப்பதும், ரத்த தானம் கொடுக்கச் செல்லும் உத்தமர்களை ஏமாற்றிப் பணம் பிடுங்குவதும்—இப்படி இன்னும் எத்தனையோ அமானுஷ்யமான செயல்களைப் புரிவதும்—எருமைக் கூட்டங்களின் செயலல்லவா? இந்த இனத்து எருமைகளை 'எமனேறும் பரிகள்' என்று அழைப்பதில் ஒரு பாபமுமில்லை.

மேற்படி புதினத் தலைப்பைக்கண்டு சாதாரணமான நாலு கால் மிருகங்கள் ஆட்சேபனை தெரிவித்தாலும் அதில் ஆச்சரியமில்லை!

--வழிப்போக்கன்

# 'சிங்கப்பூரும் மலேசியாவும் மீண்டும் ஒன்றுசேரும்'

## சிங்கப்பூர் மந்திரி ராஜரத்தினம் கருத்து

கொழும்பு, செவ். ''சிங்கப்பூரும், மலேஸியாவும் படிப்படியாக ஒன்றாக இணைந்துவிடும்' என்று சிங்கப்பூர் வெளிநாட்டு மந்திரி திரு. எஸ். இராசரத்தினம் கால்பேஸ் ஹோட்டலில் இன்றுமாலை நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர்பிரிந்ததைத் தொடர்ந்து நிலவிவரும் தவறான அபிப்பிராயங்களையும்சந்தேகங்களையும் போக்கி நிலைமையைத் தெளிவுபடுத்தவே தாம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதாகக் குறிப்பிட்ட திரு. இராஜரத்தினம் மேலும் கூறியதாவது:

மலேசியாவும் சிங்கப்பூரும் அரசியல் அடிப்படையிலும் சரித்திரம் மற்றும் பொருளாதார விஷயங்களிலும் ஒரேதன்மை வாய்ந்தவை. சிங்கப்பூர் மந்திரி சபையில் இருக்கும் மந்திரிகளில் 80 சத விகிதமானோர் மலேசியாவைச் சேர்ந்தவர்களே. நானும் மலேசியாவைச் சேர்ந்தவன். மலேசியாவும் சிங்கப்பூரும் வாழ்வதாகவிருந்தால் இரு நாடுகளும் ஐக்கியப்படுவதே ஒரே வழியென நான் கருதுகிறேன்.

இந்தோனேஷியாவுடன் ராஜீயத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தவும் வர்த்தகத் தொடர்பு கொள்ளவும் சிங்கப்பூர் தயாராகவிருக்கிறது. இந்தவழியில் நாம் மலேசியர் மக்களை அச்சப்படுத்தும் வகையில்எதையும் செய்யமாட்டோம். மலேசிய மக்களை நாம் எம்மவர்களாகவே கருதுகிறோம்.

சிங்கப்பூரில் பல இனத்தைச் சேர்ந்தவர்களும், பல மதத்தைச் சேர்ந்தவர்களும் வாழ்கிறார்கள். எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்கிறோம்.

### 'அயன் ஸ்மித் ஒரு முட்டாள்'

ரொடீஷிய நிலைபற்றி திரு.இராஜரத்தினம் குறிப்பிடுகையில், திரு. அயன் ஸ்மித் ஒரு முட்டாளென்றும், அவர் யோசனையில்லாமல் தன்னிச்சையாகச் சுதந்திரப்பிரகடனம் செய்துள்ளாரென்றும் கூறினார்.

### சீன--இந்தியத் தகராறு

சீன-இந்தியத் தகராறு சம்பந்தமாகத் தற்போது எழுந்துள்ளநிலை நீடித்துக்கொண்டிருந்தால் சிறிய நாடுகளான சிங்கப்பூர், மலேஸியா ஆகியவை பெரிதும் பாதிக்கப்படுமெனவும் அவர் எடுத்துக்கூறினார்.

# டென்மார்க் இளவரசரில்லாத ஹாம்லெட் நாடகமா?

## சிங்கள சட்டத்தால் வேலை இழந்தோர் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக் கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செனட்டர்களுக்கும், தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சிங்களச் சட்டத்தினால் வேலை இழந்தோர் கழகம் ஒரு நீண்ட கடிதத்தை அனுப்பியுள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 1958-ம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களே. அவர்கள் பணத்தையும் உற்றார் உறவினர்களையும் இழந்தனர். வடக்குகிழக்கு மாகாணங்களில் நடாத்தி வெற்றிபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்திற்கும் காரணமாய் யிருந்தவர்களும் அரசாங்க ஊழியர்கள் என்பது தெளிவு. அரசாங்க ஊழியர் பிரச்னையை விட்டு வேறு ஒரு பெரிய பிரச்னை எங்கள் சமூகத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ளது என்று கூறுவது ஹம்லட் நாடகத்தை டென்மார்க் இளவரசர் இல்லாது நடிப்பது போலாகும். அரசாங்கஊழியர்களே நெடுகிலும் சமூகத்தின் நலனிற்காக தியாகம் செய்யக்கூடாது.

### யாழ். பஸ் பிரயாணிகள்சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம் பஸ் பிராணிகள் சங்கத்தின் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இக்கூட்டத்துக்கு திரு. ஆர்.சண்முகலிங்கம்தலைமை வகித்தார். புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: ஆர். சண்முகலிங்கம், உபதலைவர்: பி. அரியரத்தினம், காரியதரிசி: கே. பதஞ்சலிநாதன், உபகாரியதரிசியும் தனாதிகாரியும்: எவ். எக்ஸ். செபஸ்தியான்பிள்ளை.

யாழ்ப்பாண பஸ் போக்குவரத்து பற்றியும் பஸ் நேரசூசிகைபற்றியும் நிர்வாகிகளுடன் பேச்சு நடத்துவதென்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### தமிழ்க் காங்கிரஸ் கிளை

முள்ளியவளை, புதன்

நெடுங்கேணியில் உடுப்பிட்டி எம்.பி.யும், வவனியா எம். பி.யும் சேர்ந்து தமிழ்க் காங்கிரஸ் கிளை ஒன்றைத் திறந்துவைத்தனர்.


## விற்பனைக்கு

ஒரு வருடம் வரையில் ஒரு கைப்படப் பாவித்த நல்ல நிலையிலுள்ள, சுப்பர் டெக்ஸ்ரா ராக்ரர், (Fordson Super Dexta Tractor) விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும்.

**ராஜா கோப்பரேஷன்**

ராக்ரர் பகுதி,

ரந்தன் 1255


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதியிலுள்ள இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பெட்ரோல் தொழிலாளர் திடீர் வேலைநிறுத்தம்

# நாட்டின் பல பகுதிகளில் பெட்ரோலுக்கு தட்டுப்பாடு

## தொழிலாளர் இருவரை கூட்டுஸ்தாபன சபை அங்கத்தவர் தாக்கியதன் எதிரொலி?

கொழும்பு. செவ்.

இலங்கை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனத்தைச் (கோர்ப்பரேஷன்) சேர்ந்த தொழிலாளர்கள் இன்று வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனசபை அங்கத்தவர் ஒருவருக்கும் கூட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறுதான் இந்த திடீர் வேலைநிறுத்தத்துக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. இலங்கை பூராவுமுள்ள பதினான்கு பெட்ரோல் சேகரிப்பு நிலையங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

திடீர் வேலைநிறுத்தம் காரணமாக பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு தகராறு குறித்து பேச்சு நடத்தவருமாறும் பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனம் கோரியுள்ளது.

கூட்டுஸ்தாபன 'பவுஸர்' ஒன்றில் பெட்ரோல் கொண்டுசென்ற ஒடு சாரதியும், கிளீனரும் களனியில் சிறிது நேரம் தாமதித்தபொழுது கூட்டுஸ்தாபன அங்கத்தவர் ஒருவர் அவ்விடத்திற்குவந்து இவ்விரு தொழிலாளரைக் கண்டித்ததாகவும், இவ்விரு தொழிலாளர்களும் அங்கிருந்து பின்னர் நாத்தாண்டியா சென்றடைந்த பொழுது அங்கு சிலரினால் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. இதனை தொடர்ந்தே திடீர் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திடீர் வேலைநிறுத்தத்தினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### பதுக்கலைத் தவிர்க்க தீவிர நடவடிக்கை

கொழும்பு, செவ்.

கொள்ளை லாபமடிப்பவர்களையும், கள்ளச்சந்தைக்காரர்களையும் கண்டுபிடிப்பதில் தீவிர கவனம் செலுத்தப்படவிருக்கிறது. இந்த முயற்சியில் இன்னும் சில தினங்களில் கிராமப்புறங்களிலும் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் சென்று பரிசோதனைநடத்த இருக்கின்றார்கள்.

### விமானங்களில் சாஸ்திரி இயக்கம்

இந்திய விமானசேவை கார்ப்பரேஷனின் சகல விமானங்களிலும் திங்கட்கிழமை இரவு பிரயாணிகளுக்கு உணவு பரிமாறப்படமாட்டாது. சாஸ்திரியின் ''வாரம் ஒடு நேர பட்டினி'' இயக்கத்தை முன்னிட்டு இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

(பி.டி.ஐ.)

### முல்லைத்தீவில் உள்ளூராட்சி மந்திரி

முள்ளியவளை, புதன்

''எங்களுக்குள் இரண்டு கட்சிகள்இருந்தாலும் அவற்றின் அடிப்படைக்கொள்கைகளில் அதிக வித்தியாசம் இல்லை. தமிழினத்தின் விமோசனமே இருகட்சிகளின் நோக்கமாகும். தமிழ்க் காங்கிரஸ் கொடிகளும், தமிழரசுக்கொடிகளும் ஒன்று சேர்ந்து என்னை வரவேற்கும் இந்த நாள் ஈழத்தமிழனின் பொன்னாள்'' என்று முல்லைத்தீவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. திரு. எம். திருச்செல்வம் உள்ளூராட்சி மன்றங்கள் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

ஃ ஃ

முள்ளியவளை கிராமசபையின் தேவைகளைப் பூர்த்தி செய்துதரும்படி அங்குநடைபெற்ற வரவேற்பின்போது கிராமசபைத் தலைவர் 14 அம்சங்கள் கொண்ட மகஜர் ஒன்றை மந்திரியிடம் சமர்ப்பித்தார்.

ஃ ஃ ஃ

தண்ணீரூற்றை அடுத்துள்ள நெடுங்கேணியில் அமைச்சர் பிறரகக்கட்சிக் கிளை ஒன்றைத்திறந்து வைத்தார்

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தது பொது மக்களின் ஊழியர்களான அரசாங்க சிப்பந்திகளுக்கு பொது மக்களின் மூன்று மொழிகளும் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டியது அவசியமாக இருக்க, ஏற்கெனவே இருந்த பேச்சுத் தமிழ் நிபந்தனையையும் நீக்கியுள்ளது பெரிய அநீதியாகும். பிரதமர் இந்த அநீதியை உடன் நீக்குவாரென்றே நம்புவோம்.

கொழும்பிலே அரசாங்கக் காரியாலயங்களில் உள்ள தமிழ்சிப்பந்திகள் இம்முறை முதல் முறையாக நாவலர் பெருமானின் குருபூசையை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்துவருவதாக ஓரன்பர் வந்து தெரிவித்தார். நாவலர் பெருமானின் உருவப் படமுள்ள தபால் முத்திரையை வெளியிடவும், தேசிய வீரர்களில் நாவலர் பெயரைச் சேர்க்கவும், அவருக்கு சிலை எழுப்பவும் முயற்சிகள் நடப்பதாக அறிகிறேன்.

எல்லாம் நல்லதுதான் ஆனால் ஒரு முக்கிய விஷயம். சைவர்கள் 'சிவதீட்சை' எடுக்கவேண்டிய அவசியத்தை நாவலர் அவர்கள் வற்புறுத்திக் கூறியுள்ளார். ஐந்தெழுத்து மந்திரத்தை முறையாக எடுக்காதவர்கள் கோவிலுக்குச் செல்லவும் தகுதியற்றவரென்றும் எடுத்துக்காட்டியுள்ளார். ஆகவே நாவலர் பெருமானின் குருபூசையை ஆர்வத்துடன் கொண்டாடும் அரசாங்க சிப்பந்திகள், அவர் கூறியுள்ள இந்த யோசனையை அலட்சியம் செய்ய முடியாது. இதன்படி நடப்பின், அவர்கள் தங்களுக்கும், சைவத்துக்கும் மேலான நன்மை செய்துகொள்வதுடன், நாவலர் குருபூசையையும் உண்மையில் கொண்டாடியவராவர். குருவின் சொல்லின்படி உண்மையில் நடப்பதே மேலான குருபூசையாகுமல்லலா?

ஃ ஃ ஃ

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும், விடுக்கிற்பிராறென்று வினவுவோமல்லோம், அடுக்கற் கீழ்க்

### பாடசாலையில் சமய தீட்சை

யாழ்ப்பாணம், புதன்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த 36 மாணவ மாணவிகளும் 20 பெற்றோரும்சென்ற ஞாயிற்றுக்கிழமை சமயதீட்சை பெற்றனர். அத்தருணம் திரு. சா. பஞ்சாட்சரக் குருக்கள் சைவசமயமுறைப்படி தீட்சையை ஆரம்பித்து அறிவுரைகள் கூறினார்.

### குளிக்க .....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறை எம். பி.யின் வாசஸ்தலத்தை முற்றுகையிட்டது.

குடிதண்ணீர் விநியோகம் ஒழுங்காக நடைபெறுவதில்லை என்றும் கூப்பன் அரிசி விநியோகம் சீராக இல்லையென்றும் திரு. ஈஸ்வரலிங்கம் தலைமையில் பருத்தித்துறை எம். பி.யின் வாசஸ்தலத்துக்கு படையெடுத்த குடியேற்றவாசிகள் கூட்டம் தெரிவித்தது.

கிடக்கினு மருளின் நாம் உற்ற, நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே,

—அப்பர் சுவாமிகள்

### மரண அறிவித்தல்

அல்பிறெட் சுவாம்பிள்ளை யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெருவில் நெடுங்காலம் சுப்பிரீம்கோர்ட்டுப் பிரக்கிராசியாரும், சமாதானநீதவானும், உத்தியோகப்பற்றற்ற கௌரவநீதிபதியும், தொடர்ந்து மும்முறை மாநகர அங்கத்தவராய்க் கடமையாற்றிய திரு. அல்பிறெட் சுவாம்பிள்ளை அவர்கள் நேற்றுக் காலை 8-30 மணியளவில் இறைவன்அடி சேர்ந்தார். அன்னாரின் பூதவுடல் இன்று சாயந்தரம் 5 மணியளவில் அர்ச். மரியாயின் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர் முதலிய சகலருக்கும் அறிவிக்கின்றோம். றெஜீனா ஹவுஸ், 41, 4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1382